# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39
## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வராஜி | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | செல்லப்பன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 13.6.2024.

A1, A3 present. A2 absent, Petition u/s.317 Cr.PC filed and allowed.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் திருச்செங்கோடு தாலுகா சப்பையாபுரத்தில் குடியிருக்கிறேன். நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சின்னுசாமி எனக்கு சித்தப்பா ஆவார். ஆஜர் எதிரி சந்திரசேகரை எனக்குத் தெரியும். மற்றொரு ஆஜர் எதிரியை எனக்குத் தெரியாது. பலவருடமாக இறந்துபோன என்னுடைய சித்தப்பாவிற்கும் எனக்கும் பேச்சுவார்த்தை கிடையாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும்

தெரியாது. வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியளிக்கப்பட்டது.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும், அந்த விசாரணையில் எதிரி சந்திரசேகர் அவரது அப்பா சின்னுசாமியிடம் நிலத்தை விற்று பணத்தை கொடுக்குமாறு அடிக்கடி தகராறு செய்து வந்தார் என்றும், 18.05.2018 ம் தேதி இரவு 10.00 மணிக்கு ரமேஷ் போன் செய்து தன்னுடைய அப்பா சின்னுசாமி பேச்சு மூச்சு இல்லாமல் மல்லார்ந்த நிலையில் படுத்திருப்பதாகவும், உடம்பு ஜில் என்று இருந்ததாகவும் என்னை கூப்பிட்டார் என்றும், நான் சென்று பார்த்தபோது சின்னுசாமி கழுத்தின் இடதுபக்கம் லேசான காயத்துடன் கழுத்தை இறுக்கி கன்றிபோய் மல்லார்ந்த நிலையில் இறந்துகிடந்தார் என்றும், மேலும் அவர் செல்ஃபில் வைத்திருந்த பிரச்சனைக்குரிய நிலப்பத்திரத்தை காணவில்லை என்று ரமேஷ் சொன்னார் என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் இறந்துபோனவருக்கும் இருந்த விரோதம் பற்றி வாக்குமூலமாக சொல்லி உள்ளேன் என்றும், ஆஜர் எதிரி உறவினர் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை

மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.